**ஜனவரி – 28**

# TNPSC துளிகள்

- அமெரிக்க உள்துறையானது "பிறப்புவழிச் சுற்றுலாவை" கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட புதிய விதிகளை வெளியிட்டுள்ளது. இந்தச் சுற்றுலாவில் பெண்கள் பிரசவிப்பதற்காக அமெரிக்காவிற்குச் சுற்றுலா செல்கின்றார்கள். இதனால் இவர்களின் குழந்தைகள் அமெரிக்கக் குடியுரிமையைப் பெறத் தகுதியுடையன.
    - பிறப்புவழிச் சுற்றுலா என்பது குறிப்பிட்ட நாட்டில் குழந்தையைப் பெற்றெடுக்கும் நோக்கத்திற்காக அந்தக் குறிப்பிட்ட நாட்டிற்குப் பயணம் மேற்கொள்வதைக் குறிக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## எதிரி நாட்டவர்களின் சொத்துகள்

- மத்திய உள்துறை அமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் குழு (அரசு) 9,400க்கும் மேற்பட்ட எதிரி நாட்டவர்களின் சொத்துகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதைக் கண்காணிக்க இருக்கின்றது. அரசாங்கத்தின் மதிப்பீடுகளின் படி இந்தச் சொத்துகளின் மதிப்பு சுமார் 1 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.
- பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் குடியுரிமையைப் பெற்ற மக்களால் விட்டுச் சென்ற சொத்துக்கள் எதிரி நாட்டவர்களின் சொத்துகள் என்று அழைக்கப் படுகின்றன.
    - 9,280 சொத்துகள் பாகிஸ்தான் நாட்டினராலும் 126 சொத்துகள் சீன நாட்டினராலும் இந்தியாவில் விட்டுச் செல்லப்பட்டன.
- இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 1962ன் கீழ் வடிவமைக்கப்பட்ட இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ், பாகிஸ்தான் குடியுரிமையைப் பெற்றவர்களின் சொத்துகள் மற்றும் நிறுவனங்களை இந்திய அரசு கையகப்படுத்தியுள்ளது.
- 1968 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட எதிரி நாட்டவர்களின் சொத்துகள் சட்டமானது இந்தியாவிற்கான எதிரி நாட்டவர் சொத்தின் பாதுகாவலரிடம் எதிரி நாட்டவர்களது சொத்துக்கள் தொடர்ந்து இருப்பதை (பாதுகாக்கப்படுவதை) உறுதி செய்துள்ளது.
- சில அசையும் சொத்துகளும் எதிரி நாட்டவர் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன.
- 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டச் சட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்குவதற்காக "எதிரி நாட்டவர்களின் பொருள்" மற்றும் "எதிரி நாட்டவர்களின் நிறுவனம்" என்ற வார்த்தையின் வரையறையை விரிவுபடுத்தியுள்ளது.
    - இந்தியாவின் குடிமகனாக இருந்தாலும் அல்லது எதிரி நாட்டைச் சேராத ஒரு நாட்டின் குடிமகனாக இருந்தாலும் எதிரி நாட்டவரின் சட்ட வாரிசு மற்றும் வாரிசு,
    - ஒரு நிறுவனத்தின் உறுப்பினர்கள் அல்லது பங்காளர்களின் தேசியத்தைப் பொருட்படுத்தாமல், ஒரு எதிரி நாட்டவர் நிறுவனத்தின் அடுத்தடுத்த நிறுவனம் ஆகியவையாகும்.

## பொலிவுறு நகரங்களின் 3வது உச்சி மாநாடு

- பொலிவுறு நகரங்களின் 3வது உச்சி மாநாடானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் உள்ள ஆந்திரப் பல்கலைக்கழக மாநாட்டு மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- பொலிவுறு நகரங்கள் திட்டம் குறித்த உச்சி மாநாட்டை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் ஏற்பாடு செய்தது.
- பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ஒதுக்கிய நிதியைச் செலவழிப்பதில் 100 பொலிவுறு நகரங்களிடையே அமராவதி நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஏழு கருப்பொருள்களின் கீழ் பொலிவுறு நகரங்களுக்கு ஏழு வெவ்வேறு விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.
- விருது பெற்ற நகரங்கள் பின்வருமாறு:
  - நிலை - 1 நகரங்களில் இருந்து விசாகப்பட்டினம் மற்றும் அகமதாபாத்,
  - நிலை - 2 நகரங்களில் இருந்து வடோதரா, ராஞ்சி மற்றும் கான்பூர்,
  - நிலை - 3 நகரங்களில் இருந்து சாகர், அமராவதி மற்றும் ராஜ்கோட்
  - நிலை - 4 நகரங்களில் இருந்து ஈரோடு.
- 1வது உச்சி மாநாடு, போபால், 2018.
- 2வது உச்சி மாநாடு, புது தில்லி, 2019.
- 3வது உச்சி மாநாடு, விசாகப்பட்டினம், 2020.




# சர்வதேசச் செய்திகள்

## பல்வேறு நாடுகளில் மீண்டும் போலியோ நோய்த் தொற்று

- பிலிப்பைன்ஸ், மலேசியா, கானா, மியான்மர், சீனா, கேமரூன், இந்தோனேசியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் போலியோ நோய் மீண்டும் பரவத் தொடங்கி உள்ளது. இந்த நாடுகளில் பெரும்பாலும் தடுப்பூசி மூலம் பெறப்பட்ட போலியோ தொற்றானது பரவி வருகின்றது.
- இந்த நாடுகள் அனைத்தும் கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு சூழ்நிலைகளில் போலியோ வைரஸ் நோயை ஒழித்துள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## STEM துறையில் பெண்கள் குறித்த சர்வதேச உச்சி மாநாடு

- உயிரித் தொழில்நுட்பத் துறையானது (மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகம்) 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) துறையில் பெண்கள் குறித்த சர்வதேச உச்சி மாநாட்டை புது தில்லியில் ஏற்பாடு செய்தது.
- இந்த உச்சி மாநாட்டின் ஒட்டுமொத்த நோக்கம் ஒரு அறிவியல் தொழில் துறையின் வளர்ச்சிக்காக STEM துறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதாகும்.
- இந்த உச்சி மாநாட்டின் கருப்பொருள், "எதிர்காலத்தை காட்சிப்படுத்துதல்: புதிய உச்சநிலை" என்பதாகும்.
- STEM துறையில் வெற்றிகரமான பெண்களை உதாரணமாக்கிக் காட்டுவதே இந்த உச்சி மாநாட்டின் நோக்கம் ஆகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பவகாடா சூரிய ஆலை - கர்நாடகா

- மொத்தம் 2,050 மெகாவாட் திறன் கொண்ட முதல் நிலை சக்தி ஸ்தல சூரிய ஒளிப் பூங்காவானது தற்பொழுது கர்நாடகாவின் தும்கூர் மாவட்டத்தின் வறட்சியால் பாதிக்கப்பட்ட பவகாடா பகுதியில் முழுமையாகச் செயல்பட்டு வருகின்றது.
- இது உலகின் மிகப்பெரிய சூரிய பூங்கா என்று கூறப்படுகின்றது.
- இந்தப் பூங்காவானது 2020 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்யும் மத்திய அரசின் திட்டத்துடன் ஒன்றிணைகின்றது.
- இந்தப் பூங்காவிற்காக நிலம் ஏதும் கையகப்படுத்தாமல், நிர்ணயிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள் இது செயல்படுத்தப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது கர்நாடக சூரிய ஒளிப் பூங்கா மேம்பாட்டுக் கழக நிறுவனத்தினால் (Karnataka Solar Park Development Corporation Limited - KSPDCL) உருவாக்கப் பட்டுள்ளது. இது இந்திய சூரிய ஒளி ஆற்றல் கழகம் மற்றும் கர்நாடக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமாகும்.

## சாம்பார் ஏரியில் ஒரு புதிய ஆர்க்கியா (தொன்மை பாக்டீரியாக்கள்)

- தேசிய நுண்ணுயிர் வள மையம் - தேசிய செல் அறிவியல் மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் (National Centre for Microbial Resource — National Centre for Cell Science / NCMR - NCCS) ராஜஸ்தானில் உள்ள சாம்பார் உப்பு ஏரியில் ஒரு புதிய ஆர்க்கியாக்களை (தொன்மை பாக்டீரியாக்கள் - ஒரு வகையான நுண்ணுயிரிகளை) கண்டுபிடித்து உள்ளனர்.
- ஆர்க்கியா (ஒற்றை ஆர்க்கியோன்) என்பது வெப்பமான நீரூற்றுகள், குளிர்ந்த பாலைவனங்கள் மற்றும் உயர் உப்புத் தன்மை கொண்ட ஏரிகள் போன்ற மிகக் கடுமையான வாழ்விடங்களில் செழித்து வளரும் நுண்ணுயிரிகளின் ஒரு பழமையான குழு ஆகும்.
- இவை நுண்ணுயிர் எதிரி மூலக்கூறுகளை உருவாக்குவதற்காகவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிவு நீர் சுத்திகரிப்புப் பயன்பாடுகளுடன் ஆக்ஸிஜனேற்ற செயல்பாட்டிற்காகவும் அறியப் படுகின்றன.

- சாம்பார் ஏரியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புதிய ஆர்க்கியாவிற்கு நாட்டில் நுண்ணுயிர்ப் பன்முகத்தன்மை ஆய்வுகளுக்கு மிகுந்த பங்களிப்பு அளித்ததற்காக உயிரி தொழில்நுட்பத் துறைச் செயலாளரான டாக்டர் ரேணு ஸ்வரூப்பின் பெயரால் "நட்ரியால்பா ஸ்வரூபியா" என்று பெயரிடப் பட்டுள்ளது.

***NCMR – NCCS பற்றி***

- தேசிய நுண்ணுயிர் வள மையமானது நுண்ணுயிர் கலாச்சாரச் சேகரிப்பு மையமாக (Microbial Culture Collection - MCC) 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது இந்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறையின் கீழ் வருகின்றது.
- பாக்டீரியாவின் பன்முகத் தன்மையைப் பாதுகாத்து, அதனைப் பட்டியலிடுவதே இதன் பணியாகும்.

# மாநிலச் செய்திகள்

## 1வது புத்தாக்கத் திருவிழா

- அருணாச்சலப் பிரதேச மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆணையமானது தேசியப் புத்தாக்க அமைப்புடன் இணைந்து முதலாவது புத்தாக்கத் திருவிழாவை இட்டாநகரில் ஏற்பாடு செய்தது.



- இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவானது அருணாச்சல பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் மத்தியில் கலாச்சார கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியாவின் முதலாவது சிறப்புமிகு உருவாக்க செயல்கூடம் (Fab Labs)

- கேரள ஸ்டார்ட் அப் திட்டத்தின் ஒருங்கிணைந்த ஸ்டார்ட் அப் வளாகத்தில் இந்தியாவின் முதலாவது சிறப்புமிகு உருவாக்கச் செயல்கூடத்தை கேரள முதல்வர் பினராயி விஜயன் திறந்து வைத்தார்.
- இந்த ஆய்வகமானது அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து செயல்படும். இது வன்பொருள் துறையை மேம்படுத்துவதில் பணியாற்ற இருக்கின்றது.
- அமெரிக்காவிற்கு வெளியே உள்ள ஒரே ஒரு நிறுவனம் இதுவாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கங்கா - வோல்கா நாகரிகங்களின் முதலாவது உரையாடல் - 2020

- கங்கா - வோல்கா நாகரிகங்களின் உரையாடல் – 2020 என்ற உரையாடலின் முதலாவது பதிப்பானது புது தில்லியில் நடைபெற்றது.
- இது இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான "இணைப்பு" என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடத்தப்பட்டது.
- இந்த உரையாடலானது இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையேயான சிறப்புமிக்க இருதரப்புப் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 2019 ஆம் ஆண்டின் ஹரித் ரத்னா விருது

- 5வது தேசிய இளைஞர் மாநாட்டில் தமிழக வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் என். குமார் என்பவருக்கு 2019 ஆம் ஆண்டின் ஹரித் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
- இந்த விருதானது அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தினால் (All India Agricultural Students Association - AIASA) வழங்கப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச இனப் படுகொலை நினைவு தினம் - ஜனவரி 27

- ஐக்கிய நாடுகளின் உலகளாவிய தகவல் தொடர்புத் துறையானது இனப் படுகொலையினால் பாதிக்கப் பட்டவர்களின் நினைவாக சர்வதேச இனப் படுகொலை நினைவு தினத்தை அனுசரித்தது.
- இந்த ஆண்டானது (2020) இனப் படுகொலையின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது.
- இந்தத் தினமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப் பட்டது.
- இந்த சர்வதேச தினமானது இரண்டாம் உலகப் போரின் முடிவைக் குறிக்கின்றது.
- இந்தத் தினத்தின் கருப்பொருள், "75 ஆண்டுகளுக்குப் பின்பு உலகளாவிய நீதிக்கான ஆஷ்விட்ஸ் – இனப்படுகொலை தொடர்பான கல்வி மற்றும் நினைவு தினம்" என்பதாகும்.
- இந்தத் தினமானது ஆஷ்விட்ஸ் விடுதலையின் ஆண்டு நிறைவையும் குறிக்கின்றது.
- படுகொலை என்பது 1941 மற்றும் 1945க்கு இடைப்பட்டக் காலகட்டத்தில் ஐரோப்பிய யூதர்களின் இனப் படுகொலையைக் குறிக்கின்றது.




# இதரச் செய்திகள்

## பாரத் பர்வ் 2020

- இந்தியாவின் உத்வேகத்தைக் கொண்டாடும் திட்டமான 2020 ஆம் ஆண்டின் பாரத் பர்வ் ஆனது புது தில்லியில் உள்ள செங்கோட்டையில் தொடங்கி 2020 ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை நடைபெற இருக்கின்றது.
- இந்தத் திட்டத்தின் கருப்பொருள், "ஒரே பாரதம் வளமான பாரதம்" & "மகாத்மா காந்தியின் 150வது ஆண்டு தினத்தைக் கொண்டாடுதல்" என்பதாகும்.
- பாரத் பர்வ் என்ற திட்டத்தின் நோக்கம் நாட்டின் பல்வேறு சுற்றுலா இடங்களைப் பார்வையிட மக்களை ஊக்குவிப்பதும் 'தேகோ அப்னா தேஷ்' உணர்வை வளர்ப்பதும் ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★